புதினப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது
DUPLICATE

# இந்துசாதனம்

விரோதிஞூ (1839) ஆவணி மீ ௨௨௳ ஆரம்பமானது.

பத்திரக் கிரயம்.
யாழ்ப்பாணப்பட்டினம்: ஒரு வ-க்கு ரூ ௨-௮௦.
வெளியூர், இந்தியா: ,, ரூ. ௩-௬௦.
தொலைசப்பகுதி: ,, ரூ. ௩-௫௦.
தனிப்பிரதி சதம் ௬.
முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

# THE HINDU ORGAN.

## குருவாரந்தோறும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

விளம்பர விகிதம்.
முதன் முறைக்கு:—ஒருகலம் ரூ. ௩-௫௦.
,, அரைக்கலம் ரூ. ௨-௦௦.
,, கால்கலம் ரூ. ௱-௩௫.
,, ஒரு அங்குலம் -௩௫.
அடுத்தமுறைகட்கு மேற் விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினாலன்றி கவனிக்கப்படா.

புத்தகம் ௩௨. } யாழ்ப்பாணம்—ரௌத்திரிஞூ பங்குனிமீ ௪௨ | ௧௯௨௧-ம்ஆ மார்ச்சுமீ ௩௧௨. { இலக்கம்—௩௫






௨
கணபதி துணை.

சீர்பூத்த கருவிநா ஞணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணிங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது நூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப்பிரானுர்தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென்றேறு
மதப்பூத்த விநாயகன்றாள் வணங்கி வாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ராவினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

இரவில் மணி பார்க்கும்
8 மூலை ரேடியம்
ரிஸ்லெட் கெடியாரம்




செட்டால், சிங்கப்பூர், மோரீஸ் முதலிய தேசங்களுக்கு முற்பணமில்லாமல் வி. பி. யில் அனுப்பமுடியாது.

டி. சி. நாகலிங்கப்பா அண்டு கோ.
பார்க்டவுன் போஸ்டு,
(Y. 2.) மதராஸ்

## இலங்கையில் இருந்து ஒரு விளம்பரம்.

கீழ்ச்சொல்லும் குணங்கள் காணுமற்போனால் மருந்துவிலை திரும்பக் கொடுக்கப்படும்.

### அற்புதமான ஔஷதம்.

ஆயுர்வேத தாதுஸ்தம்ப வட்டிக்காவ
விலை 30-க்கு ரூபா 2 சதம் 50, அல்லது ரூபா 2 அணு 8.

தாதுபுஷ்டியும் இந்திரியக்கட்டும் இல்லாதவர்களுடைய நற்காலம்.

ஆச்சரியம்! மிக ஆச்சரியம்!!

### உண்மையான ஔஷதம்.

ஒருவேளை மருந்தில் குணந்தெரியும். இந்த மருந்தானது சகலவித மேகச்சூடு, வெட்டைச்சூடு, பித்தச்சூடு முதலான உஷ்ணங்களைச் சமனாக்கி தாதுபுஷ்டி, சரீரபுஷ்டி, முகவசீகரம், தேசகாந்தி, மூளைக்குப் பலங்கொடுப்பதுடன் ஆண்மைக்குறைவு, நரம்புத்தளர்ச்சி, அக்கினிமந்தம், மலச்சிக்கல், பசியின்மை, வீரியநஷ்டம் முதலான வியாதிகளைச் சுகமாக்கும். தேவாமிர்தம் இது ஒன்றுதான்.

ஆயுர்வேத பிரமேக நிவாரணி.

இதனால் குணமாகும் வியாதிகள்:—வெள்ளை, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, இரத்தம் வடிதல் முதலான மேகவியாதி 21-க்கும் சஞ்சீவி.

இதன் விலை சீசா 1-க்கு ரூபா 2.

நமது மருந்துகள் வியாபாரஞ்செய்ய கமிஷன் ஏஜண்டுகள் தேவை. 100-க்கு 25 வீதம் கமிஷன் கொடுக்கப்படும்.

### ஆயுர்வேத தைலம்.

ஆச்சரியமான மருந்து ஒவ்வொரு வீட்டிலும் அவசியம் இருக்கவேண்டியது.

### இதை ஒருமுறை உபயோகித்துப் பாருங்கள்.

விலை சொற்பம்! குணம் அதிகம்!

இந்தமருந்தை வெளியேதேகத்தில்பூசுவதினுல்குணமாகும் வியாதிகள்.

(1) தலைவலி, கபால இடி, பிடரிவலி, தடிமல், ஜலதோஷம், நெஞ்சுவலி, மார்படைப்பு, இருமல், கக்கலிருமல், ஒருத்தலைவலி, வாந்தி முதலிய வியாதிகளும்,

(2) வாய்வு, வலிகள், சரம்புவலிகள், பிடிப்புகள், சளுக்கு வலிகள், கைகால் குளிர்ச்சி, தெண்டை இழுத்தல், வயிற்றுவலி, வாந்திபேதிகாலங்களில் உண்டாகிற சகல வியாதிகளும்,

(3) வெட்டை வாய்வு இடுப்புவலி, முழங்காலவலி, கணுக்காலவலி, கைவலிகள், உளைச்சல்கள், வாதம் 80 வகைகளும்,

(4) பல்வலி, பல்லரணை, கன்ன வீக்கம், கட்டிகள், புறப்பாடுகள், மொழிவீக்கம், ரத்தக்கட்டு, சதை பிரட்டல் முதலியவைகளும்,

(5) தேள் கடி, பூரான் கடி, எலிக்கடி, விஷக்கடிகள், சிறுகுழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் உண்டாகிற இன்னும் அனேக வியாதிகள். இந்த மருந்தை நோயுள்ள பாகங்களில் பூசினதும் சுகமாகும். விலை சீசா 1-க்கு ரூபா 1—0—0.

டாக்டர் எம். சந்திரசேகரம், ஆயுர்வேத வைத்தியசாலை,
செ. 49, எஸ்பிளனேட் ரோட், குருநாகல். (சிலோன்.)

My Address:—**Dr. M. Santherasakaram,**
Ayurvedic Medical Hall,
No. 49 Esplanade Road, Kurunegala, Post. (Ceylon).

(M. 8)

**M. Sultan Abdul Cader,**
SULTANIN MEDICAL HALL, PORTONOVO, S. A. Dist.

துரையே! கவனியுங்கள்.

இழந்துபோன பலத்தையும் தளர்ந்துபோன நரம்புகளையும் ஒரேவேளை லேகியம் சாப்பிட்டபிறகு பலத்தைக் கொடுக்கும்.

மெடல் பெற்ற

### சிட்டுக்குருவிச் சத்தின் லேகியம்.

இந்தச் சிட்டுக்குருவிச்சத்தின் லேகியத்தைப்போல் மற்ற வைத்தியர்கள் செய்து தந்தால் 2,000 ரூபா இனுங் கொடுக்கப்படும்.

☞ கண்பிற்குக்க அன்பர்காள்! அருமையும், பெருமையும், பேரும் கீர்த்தியும்பெற்ற இந்த அற்புத குணந்தங்கிய லேகியத்தை உபயோகித்த உத்தமர்கள் மணவாழ்க்கையிலே சுகானந்த இன்பத்தை யடைவர். ஆஹா! குணத்தாற் சிறந்ததுதான் என்ற பன்முறையும் புகழ்ந்து புகழ்வரென்று இப்பூவுலகில் பிறந்து வளர்ந்தோரும் பாக்யமுடைத்தின்சித்தின்ப ஆசையென்னும் மின்னாமோகத்தில் ஆழ்ந்து தேகசத்தாகிய நாதவிந்தைச் செலவழித்துச் செலவழித்து யௌவனப்பருவத்தில் வீரியவிர்த்திகுறைந்து போகசக்தியிழந்து ஆண்தன்மையற்ற கிழவர்போல மயங்கி நிற்கும் புருஷர்களும், காதாதி மூலகை தோஷத்தால் உஷ்ணமுண்டாகிப் பிரமேக வெட்டைச் சூட்டால் இந்திரியம் ஜலம்போல் நீர்த்துப் போகதில் சீக்கிரம் ஸ்கலிதமாவோரும் நித்திரையில் ஸ்கலிதமுடையோரும் சுரமேகம் விஷப்பாண்டு முதலிய வியாதிகளால் இரத்தங் குறைந்து தாது பலஹீனப்பட்டு நரம்புகள் தளர்ந்து பசிமந்தம், மலசிக்கல், இடுப்புவலி, கைகாலசதி முதலிய வியாதிகளால் வருந்துவோரும் மனோதத்துவ புத்தியாளரான வக்கீல்கள், குமாஸ்தாக்கள் முதலியோரும் மற்றைய வேலையில் சிரத்தையுடையோரும் உபயோகித்தால் உத்சாக சந்தோஷமடைவார்கள். புதிய மெனியுடன் இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, அறிவுவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களைப் பெறுவார்கள். சதாகாலம் இந்திரியஸ்தம்பனமில்லாது போகத்தில் சீக்கிர ஸ்கலிதமுடையோருக்கு இது ஒரு இணையற்ற பரமசஞ்சீவியாகும். மருவலட்சுமீ சாஸ்திரிகளுடன்கூடித் தங்கள் பூரண ஆசையை நிறைவேற்றுது சஞ்சீவிக்கும் புருஷர்களுக்குச் சித்தானந்த உற்சாகத்தைக் கொடுப்பதில் பேர்பெற்றது. பரீட்சைசெய்யும் நண்பர்களுக்குப் பலனைக் கொடுக்கத்தக்கது. இந்த லேகியம் சாப்பிடும் விபரம் நோட்டீஸ் மருந்துடன் அனுப்பப்படும். அதிற் கண்டபடி சாப்பிடவும். இந்த மெடல்பெற்ற சிட்டுக்குருவிச் சத்தின் லேகியம் சாப்பிட்டுக் குணமில்லையென்று சத்தியமாய்ச் சொன்னால் அவர்களுக்கு எமது கம்பெனியிலிருந்து ரூபா 1000 இனும் கொடுக்கப்படும். ஓர தடவை பரீட்சைசெய்யவும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 40 நாள் | 16 பலம் | டப்பி 1-க்கு | விலை | ரூபா | 10—0—0. |
| 20 ,, | 8 | ,, 1-க்கு | ,, | ரூபா | 5—0—0. |
| 10 ,, | 5 | ,, 1-க்கு | ,, | ரூபா | 2—8—0. |

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

☞ இந்தலேகியத்துக்கு ஆடர்செய்யும்பொழுது இந்தப்பேப்பரின்பெயரைக்குறித்து எழுதவும்.

☞ பினங்கு, சிங்கப்பூர், கிள்ளான், குவாலாலம்பூர், பேரா முதலிய பிறதேச வாசகர்கள் மருந்தின் கிரயமும், தபால்சார்ஜ் ரூபா 2-0-0 யும் சேர்த்து முற்பண மனுப்பி மருந்து பெறவேண்டும். அவ்வூரார் வி. பி. யில் அனுப்பும்படி எழுதுங் கடிதங்களை அங்கீகரிக்கப்படமாட்டா. விலாசம் தெளிவாய் எழுதவும். வியாபாரிகளுக்கு 100-க்கு ரூபா 10 வீதம் கமிஷன் கொடுக்கப்படும்.

எமது விலாசம்:—
எம். சுல்தான் அப்துல்காதர்,
சுல்தானிய வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை,
தென்னார்க்காடு ஜில்லா.

எமது சிலோன் ஏஜெண்டுகள்:—
T. D. மதுரைநாயகம் அன் கோ,
ஞானசுந்தர வைத்தியசாலை,
நிம் 81, செட்டித்தெரு,
கொழும்பு.

### சாலாமிஸ்ரி லேகியம். 1.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகநன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள்மாத்திரமல்ல ஏழைகளும் இதனால் உண்டாகும் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்துவருகிறேன்.

இது சாலாமிஸ்ரி, குங்குமப்பூ, கோரோசனை, கஸ்தூரி, குமாஸ்தகா, பீதாரு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீருள்ளிவிதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அயகபஸ்பம், லங்கபஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம், சாம்பிராணிப் பதங்கம், இன்னும் அநேக புஷ்டியான மூலிவகைகள் சேர்த்துச் செய்யப்பெற்றிருக்கின்றது.

இதனுல் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு நருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால்காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாய்வு, குலைவாய்வு, இன்னும் அனேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லியவியாதிகள் சுகமாவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள்; பால் விர்த்தியாகும்.

இந்த லேகியத்தின்விலை இறாத்தல் ஒன்றுக்கு ரூபா ௨௦ அரைஇறாத்தலுக்கு ரூபா ௧௦. கால் இறாத்தலுக்கு ரூபா ௫. தபாற் செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர், பினங்கு முதலிய தொடுவாய் இராச்சியப் பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததினுல் முன் பணத்துடன் அனுப்புதல் வேண்டும். இங்ஙனம்,

க. ஆறுமுகம்பிள்ளை,
ஸ்ரீ சிவஞான ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை,
இல. 91 முதல் மருதானை, கொழும்பு.

### தனலக்ஷ்மி சில்க் சேலைகள்.

Q. 10

கலியாணச் சடங்கு முதலிய விசேஷகாலங்களிற் பாவிக்கக்கூடியதும், இந்தியாவில் இந்தியர்களால் தயாரிக்கக்கூடியதும், புதுமாதிரியானதும், கெட்டிச் சாயமுமுள்ளது. உடைஅழுத்தமானதும், உடல் பூராவும் பலவிதமான பூவேலைகள் செய்ததும், சின்னக் கரையுள்ளதும், அழகான மூர்த்தியுமான பட்டுச் சேலைகள்.

எல்லா நிறங்களிலும் இருக்கின்றன.

7 கஜம் சேலை 1 ரூபா 27—0—0.
7½ கஜம் சேலை 1 ரூபா 30—0—0.
8 கஜம் சேலை 1 ரூபா 35—0—0.
9 கஜம் சேலை 1 ரூபா 10—0—0.

ஒரே தடவையில் 6 சேலைகள் வாங்குகிறவர்களுக்கு 100 ரூபா ஐந்து வீதம் கமிஷன் கொடுக்கப்படும்.

தனலட்சுமி சுதேச ஜவுளி மளிகை,
19, அம்மன்சன்னதி,
மதுரை,
தென் இந்தியா.
Tel. Address: "Murahari", Madura, (S. INDIA.)


### புதிய கையொப்ப நேயர்கள்.

எமது பத்திரிகைக்குப் புதிய கையொப்ப நேயர்களாகச் சேர விரும்புவோர் ஒருவருடப் பத்திரக்கிரயத்தை முற்பணமாக அனுப்பிப் பத்திரிகையைப் பெற்றுக்கோள்ளல் வேண்டும்.

இங்ஙனம்,
"இந்துசாதன" மானேசர்.


### கதிரமலைப் பேரின்பக் காதல்

இரண்டாம் பதிப்பு

வெளிவந்துவிட்டது.

விலை சதம் ௫௦.

இந்துசாதன மானேஜர்,
வண்ணார்பண்ணை.

## குடிசன மதிப்பு விளம்பரம்.

(G. 83.

இலங்கைக் குடிசன மதிப்பு 1921 ம் ஆ. பங்குனி௴ 18௳ வெள்ளிக்கிழமை இரவு எடுக்கப்படும். அன்றிரவு 7 மணிக்குப்பின் எல்லோரும் கூடிய மட்டில் தங்கள் தங்கள் வீடுகளிலேயே இருந்து தங்கள் பெயரையும் மற்றும் விபரங்களையும் குடிசனமதிப்பு இடாப்பில் பதிவு செய்வித்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எல். ஜே. பி. ரேணர்,
குடிசன மதிப்பு அதிகாரி.

குடிசன மதிப்புக் கந்தோர்,
கொழும்பு, 1921ம் ௵ மார்ச்சு௴ 12௳.

## கேள்விப்பத்திரம்.

G. 85.

1. இத்தால் சகலருமறியவும் சிவியாதெரு உப்பளத்தில் வேலி பழுதுபார்த்துக்கொடுக்கவிருப்பவர்கள் கேள்விப்பத்திரம் அனுப்பலாம்.

2 எல்லாக்கேள்விப்பத்திரங்களும் இணைப்பிரதிகளாகஎழுதி ஒரு உறையில் வைத்து முத்திரை வைத்து வடமாகாண ஏசன்றத்துரைக்கு என்று மேல்விலாசம் போட்டிருக்கவேண்டும்.

3. சிவியாதெரு உப்பளம் வேலி பழுதுபார்க்கக் கேட்கும் கேள்விப்பத்திரமென்று உறையில் இடதுபக்க மேல்மூலையில் எழுதவேண்டும். 1921ம் ௵ பங்குனி (மார்ச்)மாதம் 21ந் தேதி மத்தியானத்துக்கு முன் கவண்மேந்து ஏசன்றர் கந்தோரில் சேரவேண்டியது.

4. கேள்விப்பத்திரம் அதற்கென்று அச்சடிக்கப்பட்டகடதாசியிலெழுதவேண்டும். அக்கடதாசிகள் யாழ்ப்பாணக் கச்சேரியில் ரூபா25 கட்டிப் பெற்றுக்கொள்ளலாம். அப்படியானகடதாசியில் எழுதாத கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. மாற்றங்களுக்கு கைபொப்ப முதலெழுத்துக் கனிடப்படவேண்டும். அல்லாவிடில் கேள்விப் பத்திரங்கள் பிழையென விலத்தப்படும்.

5. முழுவிபரங்களும் இக்கந்தோரில் அறிந்து கொள்ளலாம்.

எம். பிரசாட்,
கவண்மேந்து ஏசன்றக்காக.

யாழ்ப்பாணக்கச்சேரி,
1921 ம் ஆண்டு பங்குனி௴ 3௳.

# இந்து சாதனம்

யாழ்ப்பாணம்:—ரௌத்திரி௵ பங்குனி௴ ௯௳

## பின்னரும் யுத்தம் நிகழுமோ?

சென்ற சில தினங்களாகச் சாமான்ய சனங்கள் "பின்னரும் யுத்தம் நிகழுமோ" என மிக்க ஆவலுடனும் அச்சத்துடனும் வினவத் தலைப்பட்டிருக்கின்றனர். கல்வியறிவுடையவர்கள் கொழும்பு இந்தியா முதலிய இடங்களிலிருந்து வரும் சமாசாரப் பத்திரிகைகளை மிக்க ஆவலுடன் எதிர்பார்த்திருந்து அவற்றின்கணுள்ள தந்திச்சமாசாரங்களைக் கவனமாகப் படிக்கின்றார்கள். கடந்த யுத்தங் காரணமாகச் சனங்கள் சொல்லொணுக் கஷ்டங்களை யனுபவித்தமையினால், பின்னரும் யுத்தம் ஆரம்பித்தால் முந்திய கஷ்டங்களைப் பார்க்கிலும் பன்மடங்கு கஷ்டங்களை அனுபவிக்கவேண்டி வருமென்று எண்ணமே சனங்கட்கு இத்துணை ஆத்திரத்தையும் திகிலையும் விளைப்பது.

இனிமேலும் யுத்தம் நிகழுமோ நிகழாதோ வென்பதைப்பற்றி எவ்விதமான இராசதந்திர நிபுணரும் இலகுவிற் சொல்லுதல் முடியாது. மழைக்கோலமில்லாது காத்திராப்பிரகாரம் இடிமுழக்கத்துடன் கூடி மழைபெய்தலுமுண்டு. கார்முகிலிருண்டு மின்னி இடியிடிக்க, உலகத்தவர் பெருமழை பெய்யுமெனக் காத்திருக்க ஒரு பெருங்காற்று எவருங் காத்திராதபடி எண்டிசைகளில் ஒரு திசையிலிருந்து புறப்பட்டு, கரிய மழைமுகில்களையெல்லாஞ் சிதறச்செய்து பழையபடி வெளிக்கச் செய்தலுமுண்டு. இவ்வாறே யுத்தவிஷயத்திலும் நிகழும் நிகழாதென்பதைக் கூறுதல் இலகுவான கருமமன்று. ஆயினும் இப்பொழுது நிகழும் விஷயங்களைக் கொண்டும் தந்திச் சமாச்சாரங்களைக்கொண்டும் ஆராய்ந்து விரைவில் யுத்தம் நிகழ்தல் நிகழாமையைப்பற்றி ஒருவாறு கூறுதல் இயலும்.

ஐக்கிய தத்துவ ராசாங்கத்தினர் ஜர்மனியரை அவர்கள்செய்துகொண்ட யுத்த சமாதான நிபந்தனைகளின்படி இங்கிலாந்து முதலிய இராச்சியத்திற்கு நஷ்டஈடு கொடுக்கும்படி கேட்க ஜர்மனியர் தம்மால் முழுவதுந் தரச் சக்தியில்லையென மறுக்கின்றனர். ஐக்கிய தத்துவ ராசாங்கத்தார் தாம் நீதியான தொகையைக் கேட்பதாக வெண்ண, ஜர்மனியர் தங்களை முற்றாக நிர்மூலமாக்குவதற்கே ஐக்கிய தத்துவ ராசாங்கத்தினர் இங்ஙனம் கேட்கின்றனரென வெண்ணுகின்றார்கள். ஆங்கிலரிலும்பார்க்கப் பிரான்சியர் ஜர்மனியரிடம் யுத்தநஷ்டத்தை அறவிடுவதில் மிகவும் ஊக்கமாகவிருக்கின்றனர். இதற்குக் காரணம் முன் நடந்த யுத்தத்திற் பொருட்சேதத்தையும் உயிர்ச்சேதத்தையும் அதிகமாக அடைந்தவர் பெல்ஜியபிரான்சியர். இதுவுமன்றி 1871ம் ஆண்டில் பிரான்சியஜர்மனியருக்கிடையே நடந்த யுத்தத்தில் பிரான்சியர் அபஜயமுற ஜெயமடைந்த ஜர்மனியர் சிறிதும் இரக்கமின்றித் தாம் நினைத்த நஷ்டஈட்டைப் பிரான்சியரிடமிருந்து பிடுங்கிச் சென்றனர். அதனைப் பிரான்சியர் மறந்துபோகவில்லை. அக்காலத்து யுத்தசமாதானத்திற் சம்பந்தப்பட்டிருந்த கிளெமென்சியோ என்னும் பிரான்சிய இராசதந்திரி இப்பொழுதும் இந்த யுத்த சமாதான நிபந்தனைகளிற் சம்பந்தப்பட்டிருக்கின்றார். ஆங்கிலரும்பிரான்சியருடன் இவ்விஷயத்தில் ஒத்துநிற்கவேண்டியவர்களாகவேயிருக்கின்றார்கள். ஏனென்றால் கடந்த யுத்தத்திற்கும் யுத்தங் காரணமாக விளைந்த உயிர்ச்சேதங்கட்கும் பொருட்சேதங்கட்கும் ஜர்மனியரே காரணராவர். ஆனால்ஜர்மனியர் தாம்யுத்தத்திற்குக்காரணரென்பதை ஒத்துக்கொள்வதற்குச் சிறிதும் விரும்புகின்றார்களில்லை.

ஜர்மனியர் நிபந்தனைகட்கு இணங்காமையைக்கண்ட ஐக்கிய தத்துவ ராசாங்கத்தினர் றயின்பகுதியில் ஜர்மனியருக்குரிய டுசெல்டோர்ப், றூறோட், டசல்டோவ் என்னும் மூன்று இடங்களையுஞ் சில துறைமுகங்களையுங் கைப்பற்றினர். தங்கள் சைனியங்களையுஞ் சித்தஞ்செய்தனர். இவற்றையெல்லாங் கண்டும் ஜர்மனியர் இதுவரையில் வாளாவிருக்கின்றனர். இதனாலே ஜர்மனியர் பல்லுப்பிடுங்கிய பாம்பின் நிலையிலிருக்கின்றனரென்பது நன்கு விளங்குகின்றது. ஜர்மனியர் முந்திய நிலையிலிருந்தால் தத்துவராசாங்கத்தினர்க்குமுந்தித் தாமே யுத்தம் ஆரம்பித்துவிடுவர். ஐக்கிய தத்துவ ராசாங்கத்தினர் விஷயத்தில் அமெரிக்கா மாத்திரம் தூரத்தில் நிற்பதாகத் தோற்றுகின்றது. ஆனால் ஜர்மனியர் விஷயத்திலோ அவர்கட்கு முந்தித் துணையாயிருந்த இராச்சியங்களெல்லாம் இப்பொழுது அவர்களுடன் சேராது நிற்கின்றன. இதனாலும் ஜர்மனியர் உதவியற்றவர்களாயிருக்கின்றனர். சூடுகண்ட பூனை அடுப்பங்கரையை நாடாதென்பது பழமொழி. இவற்றையெல்லாம் உற்று நோக்கும்போது ஜர்மனியர் இப்பொழுது யுத்தத்திற்குப் புறப்படுவாரென எண்ணுதற்குச் சற்றேனுமிடமில்லை. காலகதியில் ஏது வருமோ அதனைச் சொல்லுவது யாம் முன் சொன்னபடி எவராலும் முடியாது. ஐக்கிய தத்துவராசாங்கத்தினரும் கூடிய வரையில் யுத்தத்திற் பிரவேசியாமல் விவகாரங்களைச் சமாதானமாகத் தீர்த்துக் கொள்ளல் வேண்டுமென்னும் நோக்கத்துடன் இருக்கின்றாரென்பது லயிட் ஜோர்ஜ் போன்றவர்களின் உபந்யாசங்களாலும், மற்றுந் தந்திச் சமாச்சாரங்களாலும், பிறவாற்றானும் அறியத்தக்கதாகும். ஆதலால் சனங்கள் "யுத்த மாரம்பிக்குமோ"வென்றெண்ணித் திகிலுறுவதற்கு இப்பொழுது யாதும் ஏதுவில்லையாகும். ஆனால் தத்துவ ராசாங்கத்தினர் ஊறற் புண்ணைப் பரிகரியாமல் வைத்திருப்பது போல் இவ்விஷயத்தை யாதும்முற்றின்றி வைத்திராது இச்சமயத்திலேயே ஒரு தீர்க்கமான முடிவுசெய்துகொள்வாராயின் அது உலகோர்க்குப் பெரும் ஆறுதலாகும்.

சகலவிதமான அச்சுவேலைகளும்
மிக அழகாகவும்
வெகு விரைவாகவும்
செய்துகொடுக்கப்படும்.

சைவப்பிரகாசயந்திரசாலை
"இந்துசாதன" ஆபீஸ்,
வண்ணார்பண்ணை.

## சமாச்சாரம்.

நாவலியில்:— வெப்பநோய், சின்னமுத்து, சின்னம்மை (கொப்பளிப்பான்) முதலிய தொற்றுநோய்கள் இடையிடையே பரவுகின்றன.

காமதகன உற்சவம்:—இம்மாதம் பங்குனி௴ 10-ம் புதன்கிழமை பிற்பகல் 4½ மணி முதல் இரவு 9 மணி வரையும் நல்லூர் ஸ்ரீ சமலாம்பிகாசமேத கைலாசநாதஸ்வாமி கோயிலில் மன்மத தகன உற்சவம் நடைபெறும்.

மலையகத்தில்:—சில மாதங்களாக மழையின்மையால் நுவரெலியாப் போன்ற இடங்களிலும் தண்ணீருக்குக் கஷ்டப் படுகின்றார்களாம்.

அரிசிநெல்விலை:—அரிசி ஒருசேர் 24சதமாகவும், நெல் ஒருபுசல் மூன்று ரூபாவாகவும், சிறிது விலை யேறிக்கொண்டன.

புதிய சட்ட நிருபணசபை:—புதிய சட்டநிருபணசபைக்கு அங்கத்தவர்களைத் தெரிவு செய்தலாகிய கருமம் இம் மார்ச்சு௴ 31௳ நிகழும்.

வட்டுக்கோட்டைக் கொலை வழக்கு:—கொழும்புச் சுப்றீம் கோட்டில்விசாரணை செய்யப்பட்ட இவ்வழக்கிற் சம்பந்தமான எதிரிகள் நிரபராதிகளெனக் கண்டு விடுதலை யடைந்தனர்.

சோரமாகச் சாராயம் விற்றவர்:—யாழ்ப்பாணம் பறக்கித்தெருவில் ஒருபறங்கிப் பெண் சோரமாகச் சாராயம் விற்றனள் என்ற குற்றத்தின்பேரில் விசாரிக்கப்பட்டு 300ரூபா அபராதம் விதிக்கப் பெற்றனளாம்.

ஐப்பானிய இளவரசர்:—இவர் கொழும்பிற்கு வரும்போது அநுராதபுரத்திலுள்ள கெள்ளாசப் புத்த ஸ்தலம் முதலிய புராதன ஸ்தலங்களையும் தரிசித்துச் செல்வாரெனச் சொல்லப்படுகின்றது.

கொழும்பிற் பிளேக்நோய்:—இந்த வருடம் இக்கொடிய நோயாற் கொழும்பிற் பீடிக்கப் பட்டவர்களும் இறந்தவர்களும் பலராம். இதுவரையில் இந்நோய் வாய்ப்பட்டார் தொகை 130. இந்த மாசத்தில் மாத்திரம் 13பேர் இந்நோய் வாய்ப் பட்டனர்.

தேசாதிபதியின் பாரியாரும் மகமதிய பெண்களும்:—நம் தேசாதிபதியவர்களின் பாரியார் இலங்கைப் பெண்களை அழைத்துவைத்துக் கொண்டாடியபோது மகமதிய பெண்பாலார் அந்தச் சபைக்குச் சென்றிலர். அவர்கள் பகிரங்கமான இடங்களுக்குச் சென்று மற்றையோருடன் சரியொத்துச் சமாளித்துக் கொண்டாடும் இயற்கையற்றவர்களென்பதைத் தேசாதிபதியின் பாரியார் விசாரணையாலறிந்து மேற்படி கொண்டாட்டமொழிந்தபின் ஓர்நாட் குறித்து அவர்களைத் தனிமையா யழைத்துக் கொண்டாடினர்.

சேர்மன் வியாபாரம்:—சேர்மனிக்கும் இலங்கைக்குமிடையே வியாபாரம் அதிகமாய்நடக்கத்தொடங்கியிருக்கிறது. ஆனல், அது பெலப்புள்ளநிலையிலிருக்கவில்லை. சேர்மனியர் முட்டுப்பாட்டினால் உடனுக்குடனே இலங்கை வியாபாரிகளுக்கு நாணயமாய்ப்பணங்கொடுத்துக்கொள்ளப்படமாட்டாது தட்டுக்கெடுகின்றனர். இலங்கையிலிருந்து ஒருமுறையில் அமோகமாயேற்றிய சாமான்களுக்கு முதல் மூன்றுமாசத்தவணை கேட்டிருந்த சேர்மனியவியாபாரிகள் பின்னர், அத்தவணையை நீட்டிக்கும்படி தந்திச்சமாசாரம்விடுத்துக் கேட்டிருக்கிறார்கள். இப்படிப் பட்ட சுணக்கத்தினாலேயே இலங்கை வியாபாரிகள் இனிமேல் அந்தேசத்துக்குச் சாமான்கள் அனுப்புவதைப்பற்றி யோசிக்கிறார்களாம்.

உ, தா-வை.

## தேகவியோகம்

காவற்குழி கருணாகரர் தம்பையாஅவர்கள் சென்றபெப்ருவரி௴ 26௳ தேகவியோகமாயினரென்னுஞ் செய்தியைக் கேள்வியுற்று அனுதாபமுறலானோம். இவர் செல்வம் செல்வாக்கு உதாரத்துவம் முதலிய பெருங்குணங்கள் பொருந்தியவர். காவற்குழியுடையார் ஸ்ரீ. இல்லைநாதரவர்களும் தோட்டப்பகுதியில் வேலையாயிருக்கும் ஸ்ரீ. கருணாகரரும் இவர்புத்திரர்கள். சிங்கப்பூர்ப்பகுதியில் உத்தியோகத் திலிருந்து இப்பொழுது இளைப்பாறியிருக்கும் வண்ணார்பண்ணை ஸ்ரீ. நாகரத்தினமவர்களின் மனைவியும் ஸ்ரீ. இராசரத்தினமவர்களின் மனைவியும் இவரதுபுத்திரிகள்.

## நெல்லியடி அரசினர் கலாசாலை.

இக்கலாசாலை இம்௴ 7௳ திங்கட்கிழமை காலை 9 மணி வரையில் வடமாகாண அதிபதி கொன்ஸ்ரன்ரைன் துரைகளால் தொடக்கப் பெற்றது. இதுவே யாழ்ப்பாணப் பகுதியின் முதல் அரசினர் கலாசாலையாகும். இதனை ஆரம்பிக்கச் சென்ற மாகாண அதிபதி அவர்கள் நெல்லியடிச் சந்தியிலமைக்கப்பெற்ற பந்தரில் வரவேற்கப்பட்டனர். அவரும் அவர் பாரியாரும் வித்தியாகர்த்தர் மெஸ். எ. எவான்ஸ் அவர்களும் டை சந்தியினின்று கலாசாலைக் கட்டிடம் வரையும் பூர்ப்பந்தரின் கீழாக நடந்து சென்று கலாசாலையை அடைந்தனர். கட்டிடம் இடப்போதாமையால் திரளான சனம் புறத்தில் நின்றனர். அப்பொழுது வடமாகாண வித்தியா தரிசி உதவி வித்தியா தரிசிகள் வடமராட்சிப் பகுதியிலுள்ள பலபிரபுக்கள் சமூகமளித்தனர். முதலில் மாகாண அதிபதிக்கு கரகெட்டி வைவாங்கில கலா சாலை முதலுபாத்தியாயர் ஸ்ரீ கிருஷ்ண பிள்ளை அவர்கள் ஒருவந்தனோபசாரபத்திரம் வாசித்து ஈற்றில் மெஸ். எவான்ஸ் அவர்களுக்கும் மெஸ். டெஸ்ஹாம் துரைகளுக்கும் ஸ்துதி கூறினர். அதன்பின் ஸ்ரீ S. சுப்பிரமணியம் பிறக்கிராசியார் அவர்களும் ஸ்ரீ S. கணபதிப்பிள்ளை அப்புக்காத்து அவர்களும் ஸ்ரீ ச. சபாபதிப்பிள்ளை மானேசர் அவர்களும் அரசினர் இவ்வித கலாசாலையை உண்டாக்கி உதவிசெய்தற்காக அரசினர்க்கும் வித்தியாகர்த்தருக்கும் வந்தனங் கூறினர். பின்னர் மெஸ்கொன்ஸ்ரன்ரைன் அவர்கள் கலாசாலையைத்தொடங்கினர். பின்பு உவெஸ்லியன் மிஷனரிகளைம் பார்க்கர் சில குறிப்புரைகூறி முடிக்க மெஸ் எவான்ஸ் அவர்கள் கலாசாலைக்கு உதவியாயிருந்த ஊரவர்களுக்கும் வடமராட்சி மணியகாரர் அவர்களுக்கும் நன்றிகூறி, இதுகாறும் மிஷனரிமார் செய்து வந்த கலாசாலைகள் வைத்து நடத்தலாகிய முயற்சியை இனிமேல் அரசாட்சியார் செய்வார்களென்றும், இதுவரையும் அவர்கள்செய்த உதவிக்காக ஊரவர்களும் அரசினரும் அவர்களிடத்து நன்றியறிந்து ஒழுகுவர்களாயிருக்க வேண்டுமென்றும், இக்கலாசாலையை பகுதி வித்தியாசங்க அக்கிராசனாதிபதியிடம் கையேற்று ஊரவர் கையிற் கொடுப்பதற்காகவே தாம் வந்ததாகவும் சொல்லி மேலும் மெஸ். எவான்ஸ் கூறிய உபந்நியாசத்தில், தாம் வித்தியாசாலைக்கு வருஞ்சமயத்தில் இவ்விதமான பெருங் கூட்டமிருக்குமென எண்ணவில்லையென்றும் தாம் அப்படிநினைத்தகாரணம் பாதிரிமாருக்கும் ஊரவர்கட்கு மிடையேயுள்ள திருப்தியீனத்தைப் பற்றியதென்றும், அத்துணை சனங்கள் சமூகமாயிருந்தமை தமக்குச் சந்தோஷமென்றும், குறித்தகிராமத்திற்கு நெல்லியடி யெனப் பெயரிருப்பவும், நெல்லிமரமொன்றுங் காணப்படவில்லையென்றும் ஆதலால் மேற்படி வித்தியாசாலையே நெல்லிமரமென்றும், நெல்லிக்கனியையுண்டார் கொண்ட தாகத்தை நீக்கி மகிழ்ச்சியைச் செய்வதுபோல டை வித்தியாசாலையின் ஆசிரியராகிய ஸ்ரீ. சிதம்பரப்பிள்ளையவர்கள் அந்நெல்லிக்கனிபோலிருந்து கல்வியென்னும் ரசத்தையூட்டி பிள்ளைகளின் அறியாமையாகிய தாகத்தைத் தீர்த்துமகிழச்செய்வாரென்றுங்கூறினர்.

பின் ஸ்ரீ. கிருஷ்ணபிள்ளை அவர்கள் அக்கிராசனர் அவர்களுக்கு ஸ்துதி கூறச் சபை நிறைவேறிற்று.

## தேசாதிபதி உபகாரம் ஏற்கவொண்ணுதாம்.

ஸேர் பொன்னம்பலம் அருணாசலமவர்கள் கொழும்பிற் பிரசுரமாகும் "ரைம்ஸ் அவ் சிலோன்" (Times of Ceylon) என்னும் பத்திரிகைக்குப் பின்வருமாறு எழுதியிருக்கின்றார்.

(மொழிபெயர்த்தது.)

ஐயா, தேசாதிபதியாகிய ஸேர் வில்லியம் மனிங் தமது விவாககாலத்தில் பரிசுகளைப் பெற்றமையைக் கண்டித்து லோகோபகாரமாக யான் எழுதிய கடிதத்திற்கு மிஸ்டர் G. M. சில்வா என்பவர் முதன்முதல் உமது நேற்றைப் பத்திரத்தில் ஒரு மறுப்பு எழுதியிருக்கின்றார். சில்வா என்பவர் அவசியமற்றதென்றும் சிறுபிள்ளைத்தனமானதென்றும் என் கடிதத்தைக் கண்டித்துக்கூறியதற்கு விடையெழுதுவதற்கு உமது பத்திரிகையிற் சிறிது இடங்கொடுக்கவேண்டும். தேசாதிபதிகளும் அரசாங்க உத்தியோகஸ்தர்களும் அவதானித்து நடக்கவேண்டிய பிரமாணங்கள் சிலவற்றை மேலதிகாரிகள்விதித்திருத்தலைச் சில்வா அறிந்திலர் போலும். குடியேற்றநாட்டு ஆபீசில் உள்ள பிரமாணப் புத்தகத்தில் 'அரசாது குடியேற்றநாட்டு உத்தியோகஸ்தர்கட்குரிய பிரமாணங்கள்' என்ற மகுடாமத்தின்கீழ் இந்தப் பிரமாணங்கள் காணத்தக்கவை. பிரமாணத்தின் 46-ம் பிரிவு வருமாறு:—"தேசாதிபதிகளும் உபதேசாதிபதிகளும் குடியேற்ற நாட்டிலுள்ள மற்றும் உத்தியோகஸ்தர்களும், சிநேகபாவமாகக் கொடுக்கப்படும் பரிசுகளைத் தவிர, உத்தியோக முறையில் பணமாயினும் பொருட்களாயினும், வேறு எவ்வகையான சகாயங்களாயினும் தமது உத்தியோககாலத்தில் எவரிடத்திருந்தேனும் பெறவொண்ணாதெனத் தடுக்கப்படுகின்றார்கள். இந்தப் பிரமாணம் குறித்த உத்தியோகஸ்தர் அளவில்மாத்திரம் அமையாது அவர்களுடைய குடும்பத்தார்விஷயத்திலும் அநுசரிக்கப்படும். தங்கள் குடும்பத்தாரும் இப்படிப்பட்ட பரிசுகளைப் பெறாதபடி குறித்த உத்தியோகஸ்தர்களே பார்த்துக்கொள்ளல் வேண்டும். ஒரு உத்தியோகஸ்தர் செய்த விசேஷ சேவையின் பொருட்டு ஏதாயினுஞ் செய்யின் அதனை அரசினருடைய அநுமதியோடு செய்யலாம்.

ஒரு உத்தியோகஸ்தர் செய்துவந்த பொது நன்மையின்பொருட்டு அவருடைய போங்கு ஊரவர்கள் எல்லோருஞ் சேர்ந்து (ஞாபக சின்ன போன்ற) ஒருகருமத்தைச் செய்யலாம்.

47-ம் பிரிவில் வேறு அரசர்களேனும் பிரபுக்களேனும் அல்லது அந்த ஊரிலுள்ள பிரதான

## கொழுநனைப் பேணல்.

பெண்களாகிய நாம் முக்கியமாய்க் கவனித்து நடக்கவேண்டியது யாது? பெண்கள் தங்கணவனைப் பேணி, கணவர்க்கடங்கி அவர் சொற்படி நடந்து அவர்தங்களை முவக்குமாறு ஒழுகுதல் வேண்டும்.

"கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை"

என்னும் நீதிவாக்கியத்திற்கிணங்க, கணவர் சொல்லைத் தட்டாது, அவர்சொல்லுக்குஙிப் பயபத்தியுடன் ஒழுகுதல்வேண்டும். பத்தாவின் பிரியப்படி நடக்கும் பெண்டிரே பதிவிரதை யெனப்படுவோள். கற்புடைய பெண்கள் இம்மையிற் புகழும் கீர்த்தியுமுடையவருமல்லாமல், மறுமையில் இன்பத்தையுமடைவார்கள். கற்புடைய பெண்கள் தங்கள் கணவரைக் கண்ணைப்போற் போற்றிப் புகழ்வார்கள்.

கணவருடைய பணிவிடைகளை வெறுப்பின்றி விருப்புடன் செய்து முடித்தல்வேண்டும். கணவர் எதாயினும் ஒருவேலை செய்யும்படி ஏவினுல் அதைத் தாமே செய்யாது பணியாளரைக்கொண்டு செய்வித்தலாகாவாம். கணவர் ஏவுமுன்னரே அவர் குறிப்பறிந்து ஒவ்வொன்றுஞ் செய்து முடித்தல்வேண்டும். கணவர் கல்வியறிவில்லாதவராயினும், நற்குணநற்செய்கை யில்லாதவராயினும், அழகில்லாதவராயினும், வயோதிகராயினும், வியாதியுடையாராயினும் அவரைச் சற்றேனும் அவமதிக்காது

"குலமகட்கழகுதன் கொழுநனைப்பேணுதல்"

என்றபடி, அவருக்குச் செய்யவேண்டிய பணிவிடைகளைச் சிறிதும் மனங்கோணுது செய்து முடித்தல்வேண்டும்.

நாயகனுடைய கோபஞ் சந்தோஷம் இவைகளைக் குறிப்பினுலுணர்ந்து அதற்குத் தக்கபடி நடந்துகொள்ளல்வேண்டும் "கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி" என்பர். எப்பொழுதும் தன் பத்தா உண்டபின்பே தான் உண்ணல் வேண்டும்: அவர் சயனித்தபின்பே தான் சயனித்தல் வேண்டும். சூரியஉதயத்திற்குமுன் நித்திரைவிட்டெழுந்து காலைக்கடன்களை முடித்துக்கொண்டு தன்னெற்றியில் திலதமிட்டு தன்னுயகரை எழுப்பல் வேண்டும். வேலையினின்றுந் தன்னுயகர் வீட்டிற்கு வரும்பொழுது அவரை முகமலர்ச்சியுடன் உபசரித்து இன்மொழிபுகன்று அவரைச் சந்தோஷப்படுத்தல் வேண்டும். அஃதன்றி கடுகடுத்த முகத்துடன் வீட்டிலில்லாத பொருட்களைச் சொல்லுதலும் ..டுவென்று நிற்றலுமாகாவாம். நாயகர் வறியவராயின் அவரை அவமதியாது நன்குபசரித்தல்வேண்டும். ஒன்றிற்கும் வழியில்லையாயினும், இருப்பதையேனும் பக்குவமாகப் பாகம்பண்ணிவைத்து சந்தோஷத்துடன் தன்னுயகர் வரவை ஆவலுடன் எதிர்பார்த்திருந்து அவரை அன்புடன் வரவேற்று ஆதரவுடன் அவருக்குச் செய்யவேண்டிய பணிவிடைகளைச் செய்தல்வேண்டும்.

கணவரின் விருப்பம் எதுவோ அதுவே நமது விருப்பமுமென்றெண்ணி நடக்கவேண்டும். நங் கணவரின் விருப்பத்திற்கு மாருக நயினத்தாருடன் கொண்டாட எண்ணங்கொண்டு கணவருடன் எக்காலமுஞ் சண்டையுஞ் சச்சரவுமாயிருத்தலாகாது. தன் சுற்ற மித்திரருடன் கூடிக் குலாவ விடவில்லை, ஆதலால் இவருடைய பந்துக்களுடன் கொண்டாடுதலுந் தகுதியல்லவென்றெண்ணி, கணவரின் இனத்தாருடன் கொண்டாட விருப்பமில்லாது அவரது எண்ணத்திற்கு மாருக நடத்தலுமாகாவாம். கணவருடைய பந்து மித்திரர்களுடன் கொண்டாடும்படி கட்டளையிட்டால் தன் சுற்றமித்திரருடன் கொண்டாடுதல் போல், தன் கணவருடைய பந்துக்களுடனுங் கூடிக் குலாவி கணவரைச் சந்தோஷப்படுத்துதலே பெண்டிர்க்கழகு. அவரின் சுற்றத்தார்மேற் குறை கூறி இல்லாததை உள்ளதென்று கோள் சொல்லி அவருடைய சுற்றமித்திரரை வெறுப்புறும்படி செய்தலாகாது. மனைவியானவள் தன் கணவரின் பிதாமாதாக்களாயினும், சகோதர சகோதரிகளாயினும் பலகக்காதபடி அவர்களுடன் அன்போடு கொண்டாடும்படி தன் கணவரைப் பணிந்து இனிய வார்த்தைகளினுல் வேண்டிக்கொள்ளல்வேண்டும். சிலபெண்கள் இங்ஙனமிராது குடும்பத்திலே கலகமே விளைவிக்கின்றார்கள். மாமன் மாமியேனும் அல்லது மைத்துனர் மைத்துனியேனும் ஏதுங் குற்றம் புரிந்தால், அதை நம் தாய்தந்தையர்கட் கறிவித்து வீண் கலகமுண்டுபண்ணுது, பொறுமையுடன் அவர்கள் செய்த குற்றத்தைப் பொறுத்து தத்தனிமிஷமே அதை மறந்து நடத்தல்வேண்டும். மாமன்மாமி இருவர்களையும் நம் தந்தை தாயரென்றெண்ணி அவர்களை அன்போடு உபசரித்து அவர்களுக்குச் செய்யவேண்டிய பணிவிடைகளைச் செய்தல்வேண்டும்.

பத்தா யாதேனும் கோபத்தினுல் தன்னை அடித்து ஏசினுல் எதிர்பேசாது மௌனமாயிருத்தல் வேண்டும். "பெண்டிர்க் கழகெதிர் பேசாதிருத்தல்" என்று பெரியோர் விதித்திருக்கின்ருர். வாய்பேசாது மௌனமாயிருந்தால் நான்கு அடி அடிப்பவர் இரண்டு அடியோடு போய்விடுவார். பத்தா ஓர் அடி அடிக்குமுன் பெலத்த சத்தமாக ஒலமிட்டு அண்டை அயலாரையெல்லாங் கூப்பிட்டு, கணவனை அவமானப்படுத்துகின்ற பேய்களுமிருக்கின்றார்கள். கணவ னடித்தால் தாமுமடித்து தம்முடைய என்ன இருக்கின்றதோ அதனுல் பததாவிற்குப் பரிமாறும் பத்திராளிகளுமிருக்கின்ருர்கள். அம்மம்ம! இவ்விதபெண்கள் எப்படிப்பட்ட நரகில் வீழ்ந்து வருந்துவார்களோ அறியேம். இவ்வித ஆணவம்பிடித்த பேய்களைப் பெண்களென்று சொல்லவும் வாய் கூசுகின்றதே! பெண்களுக்கு ஆணவமும் அகங்காரமும் ஒருபோதுமாகாவாம்.

பெண்களுக்குஉரிய தருமங்களெல்லாவற்றுள்ளும் முக்கிய தருமம் பதிவிரதாதர்மம். மனைவியானவள் தன் கணவருடைய குற்றங்களைப் பிறருக்குச் சொல்லலாகாது. கணவருடைய நற்குணங்களைச் சொப்பனத்திலும்நினைக்கலாகாது. அவருடைய நற்குணங்களையே பாராட்டி அவரை மெய்யன்போடு உபசரித்தல்வேண்டும். தெரிந்தோ தெரியாமலோ தன் பத்தா ஓர் குற்றஞ் செய்திருந்தால் அதைத் தூற்றுவ தழகாகாது. "தூற்றும்பெண்டிர் கூற்றெனத்தகும்" கணவரைத் தெய்வமென்றெண்ணி நடக்கும் பெண்டிர்க்கு ஒருகாலத்துங் கேடின்டாகாது. கணவர் முன் இனிய மொழி பேசி அன்புள்ளார்போல நடித்து, தன் தாய் தந்தையரிடம் கணவரைப் பற்றிக் குறைகூறுதலு மாகாவாம். கணவனும் மனையும் உடலிரண்டும் உயிரொன்றும்போல வாழவேண்டும். "நகமுஞ் சதையும்போலும், பூவும் மணமும்போலும் கணவனும் மனைவியும் ஒத்து வாழவேண்டும். மனைவியானவள் தன் பிதாமாதாச் சகோதரர் முதலிய சுற்றத்தாரைப் பார்க்கிலும் தன் பத்தாவிடத்திலே மிக்க அன்பு வைத்தொழுகல்வேண்டும். தன் பிதா மாதா முதலியோரைப் பிரிந்திருந்தாலும், தன்னுயகரை மாத்திரம் பிரிந்திருக்கக்கூடாது.

கணவர் வீட்டி லிருக்கும்பொழுதே நல்ல ஆடை ஆபரணங்களால் அலங்கரித்துக்கொள்ளல் வேண்டும் அவரில்லாதகாலங்களில் அலங்கரிக்கலாகாது. அவரில்லாத காலங்களில் ஆடை ஆபரணங்களால் தன் கலங்கரித்துக்கொண்டு அண்டை அயல்வீடுகளுக்குப் போகுதலாகாது. கணவரனுமதியின்றி ஓரிடமுஞ் செல்லலாகாது.

தன் தலைவருக்குத் துன்பம் வந்த காலத்து அது தனக்குநேர்ந்ததாக எண்ணி அவரனுபவிக்குந் துன்பத்தை நீக்க முயலல்வேண்டும். நமக்கென்னென்று அவரனுபவிக்குங் கஷ்டத்தைப் பார்த்துக்கொண்டிருக்கலாகாது.

"தடியாப்பெண்டிர் மடியினெருப்பு"

தன்னாலியன்றவுதவிசெய்து தன்கணவரைத் தேற்றல்வேண்டும். கணவரைக்கொண்டு வீட்டு வேலைகளைச் செய்வித்தலாகாது.

வி. பாலசௌந்தர அம்மாள்.
பொல்காவலை.

## சிவலீலாமிர்த தரங்கிணி.

தரங்கம்—க.

இந்திரன் பழிதீர்த்தமை.

(முற்றொடர்)

தம்மாட்டுத் தவறிய காரணத்தால் வந்த இந்திரனது பாவத்தைப் போக்க, ஆசாரியர் சிவலிங்க பூசையாகிய வழியும் அருள, இந்திரன், ஆசிரியரும் தேவரும் சூழப் பூமியிலிறங்கித் திருக்கைலாச மலையை வணங்கித் தென்திசை சென்று கங்கை முதலாய தீர்த்தங்களில் மூழ்கி, காசிமுதலாய திருப் பதிகள் பலவற்றை வணங்கி அசுரனைக் கொன்ற பாவம் விலகாமையால் வருந்திக் கடம்பவனத்துச் சமீபமாகச் செல்லுந் தருணத்தில் அப்பாவம் விலக, இந்திரன் அகமிக மகிழ்ந்து ஆசாரியரிடமதனைக் கூறினன். அவர், "மகாஸ்தலமும் பரிசுத்த தீர்த்தமும் இவ்விடத் திருள்ளன, அவை நமக்குக் கிடைக்க வேண்டு" மென இந்திரன் அவைகளை ஆராயுமாறு சிலரை அனுப்பிவிட்டு அப்புறஞ் சென்முன். அவன் செல்லும் வழியில், மலைபிலுள்ள குரக்குகள் மாணிக்கங்களை எடுத்துச் சிவலிங்கமாகப் பாவித்து நீரால் அபிஷேகித்தலையும், கருடன்களும் பாம்புகளும் மக்களும் சகோதரத்துவ பொருந்தி யிருப்பதையும் இந்திரன் கண்டு ஆச்சரிய மடைந்தவனுயோக முன் சென்ற தூதர் திரும்பி வந்து வணங்கி மகிழ்ச்சியுடன் பின் வருமாறு கூறத்தொடங்கினர்.

"ஐய! எவ்வுலகத்தும் கண்டறியாத அற்புதங்களை யாம் கண்டு மகிழ்ச்சி யடைந்தோம். ஓர் நிர்மல தடாகக் கரையில் ஓர் கடம்பமரநிழலின் கீழ் ஒளிப் பிழம்பாய சிவலிங்க மொன்றிருக்கின்ற" தென்ருர்.

அப்பொழுது இந்திரன் சிரமேற் கரங் கூப்பி, முக்கரண முக்குண ஒற்றுமையுடையனுய், தனது கொடும் பாவத்தைக் கெடுத்த உண்டாய சிவலிங்கமீது அன்பானது இழுக்க ஒற்ற ரோடு சென்று அத்தடாக நீரில் ஸ்நானஞ் செய்து அக்கடம் படவிப் நுழைந்து முதன்மை பெற்ற அசிவலிங்கப் பெருமானைத் தரிசித்தனன். அப்பொழுது அவன் விருத்திர கத்தியும் நீங்கப் பெற்றது. பின்பு விஸ்வகர்மனைக்கு வேண்டும் பொருள்களைத் தேவலோகஞ் சென்று கொண்டு வரும்படி சிலரை அனுப்பி, தேவ தச்சனுல் ஓர் விமானமும் அமைப்பித்து, அருட்கண்ணமை அருச்சிக்க நல்ல புஷ்பம் கிடையாமல் வருந்தும் இந்திரன், அவ்வாவியில் ஒளியிற் சிறந்ததோர் பொற்றுமரை மலரைக் கண்டனன். அன்பு மேலிட்டால் அவ்வாவிக்கும் பொற்றுமரை வாவியென நாம மிட்டபின் காடுகளை வெட்டிப், பூமியைத் திருத்தி சிவலிங்கப் பெருமான் மீது சூரிய கிரணம் படியுதலால், தன் வெண் கொற்றக் குடையின் நிழலைச் செய்யக் கருத, ஆகாயத்தினின்றும் ஓர் இரத்தின விமானம் இறங்கியது. எட்டியானைகள், முப்பத்திரண்டு சிங்கங்கள், அறுபத்துநான்கு சிவகணங்கள் தாங்கும் படியாகச் செய்யப் பட்ட அவ்விமானத்தைச் சாத்திப்பல மண்டபங்களும், கோபுரங்களும், மீனுஷி யாலயமும், பரிவார தேவதாவிக்கிரகங்களும், தீர்த்தப்படிக் கட்டு முதலியனவும் தேவதச்சனுல் அமைப்பித்தனன் அப்பொழுது முன்னே தேவலோகத்திற்குச் சென்றவர்கள் பஞ்சதருக்கள் கொடுத்த மீதாம்பர முதலிய வத்திரங் கொடுக்க தானிரர். உடனே இந்திரன் பொற்றுமரை வாவியில் மூழ்கி விபூதி யணிந்து ருத்திராக்ஷம் பூண்டு சிவலிங்கப் பெருமானை ஆகம விதிப்படி பூசித்து திரிகரண ஒருமை யோடுவலஞ்செய்து ஆனந்தக் கண்ணீர் பெருக நின்று பலவாறாகப் புகழ்ந்து துதித்தனர்.

அவனது ஸ்துதிக்குச் செவி சாய்த்த சிவபிரான் இனிய புன்னகையோடு, இந்திரனை நோக்கி, உனது விருப்பம் யாதென, இந்திரன் "ஐயனே! தேவரீர் எல்லோர்க்குஞ் சமீபத்தில் வரும் பொழுதே எனது பாவம் நீங்கவும், உமது பாத பூசை செய்யவும் உரியனுனேன்! இதனிலும் சிறந்த பாக்யாது, இவ்வாறே என்றும் உண்மைப் பூசித்து உமது தொண்டருள் யானும் ஒருவனுவே" னென்ன சிவபிரானும் திருவருள் சுரந்து, 'இந்திரனே! நீ, சித்திரை நக்ஷத்திரப்பூரணையில் என்னைப் பூசித்தால், அவ்வருடமுழுதும் பூசித்தபயன் உனக்கு வரும் நீ துறக்கஞ் சார்ந்து போகங்களை நுகர்ந்து, பிரம பதமுதலிய வற்றிலாசை யொழிந்தால், உனக்கு வீடு பேற்றைக் கொடுப்பே மெனக்கூறி இந்திரனுக்கு விடைகொடுத்தனர் இந்திரன் விழுந்து வணங்கிக் கூத்தாடிச் சிவபிரானைப் பிரிதலாற்றுது, அவரது ஆணைக் கஞ்சிப் புறவிடை பெற்று, அக்கிரிப்பிரிக்க சிந்தையுடன் சுவர்க்கத்தையடைந்து முன்போல் அரசு புரிந்தனன்.

இங்ஙனம்
K. செல்லம்மாள்,
ஸ்ரீ ராமநாத வித்தியாலயம்.


## விளம்பரம்.

மெடிக்கல் டிப்பாட் மெண்டைச் சேர்ந்த ஒப்பந்தங்கள்.

G. 79.

அநுராயக்க, பண்டாரவளை, மட்டுக்களப்பு, காலி, அம்பாந்தோட்டை, அப்புத்தளை, செற்றன், கண்டி, குருனுகல், மாத்தளை, மாத்தறை, என்னுமிடங்களிலிருந்து சாமான்கள் ஏற்றுமதி செய்ய ஒப்பந்தம் பண்ண விரும்பு வோர் கேள்விக் கடுதாசிகளனுப்பலாம். ஒப்பந்தம் நிகழுங் காலம் 1921 ம்ஆ ஐப்பசிமீ 1உ தொடக்கம் 1924 ம்ஆ புரட்டாசிமீ 30உ வரைக்கும்.

பிரதான சிவில் மெடிக்க லாபீசரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட பாரங்களிலேயே கேள்விகள் எழுதப்படவேண்டும். கேள்விக் கடுதாசிகள் பிரதான சிவில் மெடிக்கலாபீசர் கந்தோருக்கு 1921 ம்ஆ சித்திரைமீ 12உ மத்தியானம் 12 மணிக்கு முன் அனுப்பப்பட வேண்டும். நேரத்துக்குப் பின் வந்த கேள்விக் கடுதாசிகள் ஏற்றுக் கொள்ளப் படமாட்டா.

மற்றும் விளம்பரங்கள் அரசாட்சியாரின் சுற்றுப் பத்திரிகையிலிருந்து அல்லது பிரதான சிவில் மெடிக்கலாபீசரிடமிருந்து, அறிந்து கொள்ளலாம்.

மெடிக்கல் டிப்பாட் மெண்டைச் சேர்ந்த ஒப்பந்தங்கள்.

G. 78.

பின் வரும் ஆசுப்பத்திரிகளுக்குத் தீன் சாமான் கொடுக்க விரும்புவோர் கேள்விக் கடுதாசிகளனுப்பலாம்:—

(1) செந்தளை, குஷ்டரோகிகளின் ஆசுப்பத்திரி.
(2) கொழும்பு, வைத்தியசாலையின் ஆசுப்பத்திரி.
(3) டிை பெரிய ஆசுப்பத்திரி, செலவுகட்டாதோ ரிருக்கும் பக்கம்.
(4) டிை டிை செலவுகட்டுவோரிருக்கும் பக்கம்.
(5) சுகாத்தை, தொத்து நோய்க்காரரின் ஆசுப்பத்திரி.
(6) கொழும்பு, லேடிகலைக் ஆசுப்பத்திரி.
(7) டிை சொய்சா பிரசவ ஆசுப்பத்திரி.
(8) டிை விக்டோரியா கண் ஆசுப்பத்திரி.

ஒப்பந்தம் நிகழுங் காலம் 1921-ம்ஆ ஐப்பசிமீ 1 உ தொடக்கம் ஒரு வருஷத்துக்கு.

பிரதான சிவில் மெடிக்க லாபீசரிட மிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பாரம் கடுதாசியிலே கேள்விகள் எழுதப்பட்டிருக்க வேண்டும். கேள்விக் கடுதாசிகள் 1921-ம்ஆ சித்திரைமீ 5 உ மத்தியானம் 12 மணிக்கு முன் ஒப்பந்த விசாரணைத் தலைவரின் கந்தோருக்கு அனுப்பப்பட வேண்டும். நேரத்துக்குப் பின் வந்த கேள்விக் கடுதாசிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

மற்றும் விளம்பரங்கள் சுற்றுப் பத்திரிகையிலிருந்து, அல்லது பிரதான சிவில்மெடிக்கலாபீசரிட மிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

## புத்தக விளம்பரம்.

யாழ்ப்பாணம்
சைவபரிபாலன சபையாராற் பிரசுரஞ்செய்யப்பெற்றன.

| | ரூ. ச. |
|---|---|
| முதற் பாலபாடம் [சித்திரசஹிதமானது] | கO |
| இரண்டாம் பாலபாடம்(சித்திரசஹிதமானது) | கடு |
| மூன்ரும் பாலபாடம் ... ... ... ... | உO |
| நான்காம் பாலபாடம் ... ... ... ... | ௬O |
| ஐந்தாம் பாலபாடம் ... ... ... ... | சO |
| ஆரும் பாலபாடம் ... ... ... ... ... | ௫O |
| சுவாமஞ்சரி [விளக்கத்துடன்] (இது எட்டாம் வகுப்பிலும்,"ஆங்கிலஸ்கூல் லீவிங்சேர்ட்டிபிக்கற்"வகுப்பிலும் பயிலும் மாணவர்கட்குத் தமிழ்ப்பாடமாக உபயோகமாகும் வண்ணம் இயற்றப் பெற்றன்னது) .. ... ... | எடு |
| வாமஞ்சரிவிளக்கம் (யாத்திரம்) ... ... ... | ௬.O |
| நமச்சிவாயமாலை, உரையுடன் ... ... ... | ௫ |
| வெற்றிவேற்கையுரை ... ... ... ... | ௫ |
| வாக்குண்டாமுரை ... ... ... ... ... | ௫ |
| நல்வழியுரை ... ... ... ... ... | ௫ |
| நன்னெறியுரை ... ... ... ... ... | ௫ |
| இனியவை நாற்பதுரை (ஆங்கில மொழிபெயர்ப்புடன்) | கஉ |
| இலக்கண வினுவிடை... ... ... ... | கO |
| கிண்டு கக-வது கஉ-வதும் ... ... ... | உடு |
| திருவாதவூரடிகள்புராண மூலம் ... ... | உடு |
| திருச்செந்தூர்ப்புராணவுரை (இலேஸ்காகிதம்) ரூ.௧-உடு,(தல்காகிதம்) | க-OO |
| கந்தரலங்காரம் கந்தரநுபூதியுடன் ... | கO |
| கந்தசஷ்டி கவசம் ... ... ... ... ... | ௬ |
| சுப்பிரமணியசுவாமி விருத்தம் ... ... | ௬ |
| ஆறுமுகசுவாமி விருத்தம ... ... ... | ௬ |
| பிள்ளையார்கதை ... ... ... ... ... | கஉ |
| பிரபஞ்சப் பெருவழக்கு ... ... ... | கO |
| இந்துசமயி தாவரஜீவியாயிருத்தலேன்? ... | கO |
| சாவித்திரி சரித்திரம்(புதியபதிப்பு) ... | ௫ |
| குமணசரித்திரம் " ... ... | ௫ |
| பஞ்சரத்தினத் திருப்புகழ் ... ... | ௬ |
| சோமவாரவிரதமான்மியம் ... ... ... | கO |
| சிவபூசைத்திரட்டு ... (புதியபதிப்பு) ... ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்களது எட்டுப்பிரதியின்படி அச்சிடப்பெற்றது ... | கடு |

☞ இவைகள் இந்துசாதன ஆபீசிற் பெறற்பாலன. ஒரே இனத்திற் பத்துப் புத்தகம் வாங்குபவர்களுக்கு ஒரு புத்தகம் கழிவு கொடுக்கப்படும். தொகையாக வாங்குபவர்கட்குத் தருந்தகழிவு கொடுக்கப்படும். சபையாரது பாலபாடங்களையே எல்லா வகுப்புகளிலு முபயோகிக்குஞ் சைவவித்தியாசாலைகட்கு இந்துசாதனப் பத்திரிகை இரயமின்றிக் கொடுக்கப்படும்.

முற்பணமனுப்புவோர் முத்திரையனுப்பாது போஸ்ரல் ஆடரேனும் மணியோடரேனும் அனுப்புதல் வேண்டும். சபையார் அச்சிட்ட புத்தகங்களன்றி ஏனைய புத்தகங்கள் இங்கு விலைக்குக் கிடையா.

மானேசர்,
"இந்துசாதன" ஆபீஸ்,
வண்ணார்பண்ணை,

## சமரச போதினி.

இஃதொரு தமிழ் வாரப் பத்திரிகை. தஞ்சைமா நகரினின்றும் பிரதி புதன்கிழமைதோறும் வெளிவருகிறது. தமிழ் ஜில்லாக்களில் எங்கும் சுதந்தர தாகத்தை எழுப்பிச் சீக்கிரம் இந்தியர்கள் பூரண சுய ஆட்சி பெறுவதற்கு நியாயக் கிளர்ச்சி செய்வதே இதன் முக்கிய நோக்கம் இந்தியர்களுடைய சுதந்தரத்தைப் பாதுகாப்பது இதன் முதல் விரதம். கிராமவாசிகளின் குறைகளை நீக்கிக் கிராமத்தைச் சீர்திருத்தும்படி செய்வதும் அதற்கு வழிகளைக் காண்பிப்பதும் இதன் வேலை இப்பத்திரிகையில் யாவராயிருந்தாலும் நியாயம் தவறியும் இந்தியர்களுடைய லட்சியத்திற்கு விரோதமாகவும் போவார்கள் இடை நிலையினின்று சவு இரக்கமின்றிக் கண்டிக்கப்படுவார்கள். வகுப்பு, ஜாதி, மதம் முதலிய பேதங்களைக் குறைத்து இந்திய சனசமூகத்தை நிர்மாணிப்பது இப்பத்திரிகையின் லட்சியம். இதற்கு வருஷ சந்தா தபால்கூலி யுள்பட ரூபா ஐந்து ஆறுமாசத்திற்கு ரூபா மூன்று. வெளிநாடுகளுக்கு ரூபாஏழு, தேசமுன்னேற்றத்திற் கவசியமான எல்லா விஷயங்களும் தெளிவாகவும் தைரியமாகவும் எழுதப்படும், மாதிரிப்பத்திரம்அனுப்பப்படும்.

இ. சூரிய நாராயண ஐயர் பி. ஏ; பி. எல்;
பத்திராதிபர்,
"சமரசபோதினி" தஞ்சாவூர்.


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க, நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.


Printed and published by S. Ampikaipagan, for the Proprietors at the Saiva prakasa Press, Jaffna.